குற்றவியல் நீதித்துறை நடுவர், நீதிமன்றம், ஓமலூர்.
முன்னிலை: திரு.சதாம்உசைன், B.A.,L.L.B.,
(மு.கூ.பொ) குற்றவியல் நீதித்துறை நடுவர், ஓமலூர்.
சி.சி.எண். 140/2026

அ.சா.2

2026–ம் ஆண்டு ஜுன் 12–ம் தேதி வெள்ளிக்கிழமை அரசு தரப்பு சாட்சி 02–வது நபரின் வாக்குமூலம் (1969–ம் ஆண்டின் 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திருமதி.மோகனபிரியா என்பவரின் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | செல்வி | தொழில் | |
| கணவர் பெயர் | வெங்கடேஷ் | வயது | |
| கிராமம் | | தாலுக்கா | |

விசாரணை தொடங்கிய நேரம்: மதியம் 03.37 மணி,

Accused A1)Marimuthu, A2)Ganesan, A3)Santhohs are present. Advocate Mr.Siddharthasankar present for Advocate Mr.Sanchukumar for all accused. APP Mr.M.Suresh present.

**முதல் விசாரணை :**

1. நான் கருக்கல்வாடியில் குடியிருந்து பாஸ்ட்புட் கடை வைத்துள்ளேன். அ.சா.1 எனது மகன். ஆஜர் எதிரிகளை தெரியும். கடந்த 20.09.2021 ஆம் தேதி இரவு சுமார் 08.00 மணியளவில் நான் கடையில் இருந்தபோது ஆஜர் எதிரிகள் 3 பேரும் எனது கடையில் உணவு சாப்பிட்டார்கள். அப்போது பார்சல் கட்ட நேரம் ஆனதால் எதிரிகள் மூவரும் அதுகுறித்து என்னிடம் வாக்குவாதம் செய்தார்கள். சத்தம் கேட்டு பொதுமக்கள் கூட்டமாக கூடிவிட்டார்கள்.

2. கூட்டத்தில் ஏற்பட்ட தள்ளுமுள்ளில் என் மகன் கீழே விழுந்து அவருக்கு காதில் காயம் ஏற்பட்டது. நான் தற்போது எதிரிகளுடன் சமாதானம் ஆகிவிட்டேன். எதிரிகள் தாக்கல் செய்துள்ள சமதான மனுவில் உள்ள 2 வது கையெழுத்து என்னுடையது. ( **அந்த கையெழுத்து அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.) போலிசார் விசாரித்தார்கள்.

**(அரசு தரப்பு சாட்சியை பிறழ்சாட்சியாக கருதி அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்க கேட்டதின் பேரில் அனுமதி வழங்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்)**

SADHAMHUSAIN S

Digitally signed by SADHAMHUSAIN S
Date: 2026.06.12 18:10:04 +0530

4. போலீசார் என்னை விசாரித்தார்கள் என்றும், அந்த விசாரணையில் கடந்த 20.09.2021 ஆம் தேதி இரவு 08.00 மணியளவில் எங்கள் கடையில் நானும், அ.சா.1–ம் இருந்தபோது ஆஜர் எதிரிகள் அங்கு வந்து அ.சா.1 ஐ கெட்ட வார்த்தையால் திட்டி 1 ஆம் எதிரி கையால் அ.சா.1–ன் கன்னத்தின் மீது அடித்தார் என்றும், 3 ஆம் எதிரி அ.சா.1–ன் தலை முடியை பிடித்து இழுத்து கையால் அ.சா.1–ன் முதுகின் மீது அடித்தார் என்றும், 2 ஆம் எதிரி கையால் அ.சா.1–ன் காதின் மீது அடித்தார் என்றும், தடுக்க வந்த என்னை 1, 2 எதிரிகள் சேர்ந்து கெட்ட வார்த்தையால் திட்டினார்கள் என்றும் கூறிவிட்டு, தற்போது எதிரிகளுடன் சமாதானமாக சென்றுவிட்டதால் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை : இல்லை**

**விசாரணை முடிந்த நேரம் : மதியம் 03.41 மணி.**

SADHAMHUSAIN S

Digitally signed by SADHAMHUSAIN S
Date: 2026.06.12 18:10:08 +0530